# அல்லாஹ்

# முனாஜாத்

(இறையருள் வேட்டல்)

கீழக்கரை ஞானக்கடல்
மெய்ஞ்ஞான சொரூபர் மஹான்

**பல்லாக்கு வலியுல்லாஹ்**

அவர்கள் அருளியது.

அச்சிட்டு வழங்குபவர் :
**K.V.S. சதக் அப்துல் காதர்**
பல்லாக்கு வலியுல்லாஹ் தர்கா
கீழக்கரை—623 517

# முன்னுரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

கீழக்கரைப் பதியில் தொன்று தொட்டு இறைநேசச் செல்வர்களும், மார்க்க மேதைகளும், கொடைவள்ளல்களும், புலவர்களும், புரவலர்களும் பிறந்து, வாழ்ந்து மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளைச் செய்து மறைந்திருக்கிறார்கள். அவர்களின் பூதவுடல் மறைந்து விடினும் அவர்களின் புகழ் மட்டும் என்றும் மறையாமலே நின்று மணம் பரப்பிக் கொண்டு வருகிறது.

பல்லாக்கு வலியுல்லாஹ் என்று வழங்கும் ஹபீபு முஹம்மது ஸதக்கத்துல்லாஹ் (வலி) அவர்கள் ஹிஜ்ரி 1268 ரபீஉல்

அவ்வல் பிறை 1-ல் (25-12-1851) பிறந்து ஹி. 1360 ரபீயுல் ஆகிர் பிறை 25-ல் (15-12-1941) மறைந்து கீழக்கரையிலேயே அடக்கமாகியுள்ளார்கள்.

அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய அரபி பைத்துகளின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது. அவற்ருேடு அவர்கள் தமிழில் பாடியவைகளுள் ''அல்லாஹ்முனுஜாத்து'' என்னும் இப்பனுவலும் ஒன்ருகும். இந்த இறையருள் வேட்டலைப் படித்து வருவோர்க்கு உடல், உள்ளப்பிணிகள் விலகும்; வறுமை தீரும்; துன்பமும், துயரமும் அகன்று நல்வழி கிட்டும் என்பதில் ஐயமில்லை.

இவ்வளவு அருமை, பெருமை பொருந்திய இந்நூலை அச்சிட்டு வழங்கும்



பேறு எனக்குக் கிடைத்தமைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகிறேன். வாசகர்கள் படித்துப் பயனடைவதோடு எனக்காகவும் துஆ செய்யக் கோருகிறேன். வஸ்ஸலாம்.

—K.V.S. சதக் அப்துல் காதர்

# அல்லாஹ் முனாஜாத்

(1)

அல்லாஹ் அல்லாஹ் அல்லாஹ்வே
அடியாரைக் காக்கும் அல்லாஹ்வே
எல்லாம் வல்ல அல்லாஹ்வே
எங்களைக் காக்கும் அல்லாஹ்வே
சல்லல் லாநபி பொருட்டாலுஞ்
சங்கடம் போக்கும் அல்லாஹ்வே
இல்லல் லாவெனும் அல்லாஹ்வே
ஏழை யெங்களைக் காப்பாயே!

(2)

அவ்வ லோனே ஆகிரோனே
அடிமுடி வொன்று மில்லானே
எவ்வுயி ருக்கு மிரணமெலாம்
எழுகடல் வானம் பூமியெலாம்
ஒவ்வும் படியா யமைத்துவைத்து
உவப்புடன் எவ்வுயிர்க் கெல்லாமும்
செவ்வையா யுதவி யீபவனே
சிறப்பாய் எங்களைக் காப்பாயே !





(3)

அன்னையும் தந்தையும் நீதானே
ஆளும் ராஜனு நீதானே
என்ன பிழைகள் செய்தாலும்
எதையும் பொறுப்பவன் நீதானே
நின்னய மான ஆயுட்களை
நீடிப் பவனு நீதானே
பின்ன மான பலாய்களெல்லாம்
பிரிய வருள்செய் றஹ்மானே!

(4)

தொற்று நோயுந் தொடர்நோயுந்
திடீரெனக் கொல்லும் வபாநோயே
சித்தம் பதறு மிந்நோயைச்
சிறிதும் ஊரில் நில்லாமல்
பற்றி யடித்துத் துரத்திடுவாய்ப்
பரனே எங்களைக் காப்போனே
கர்த்தா இகபரம் படைத்தோனே
காப்பாய் எங்கள் றஹ்மானே;

(5)

ஆத நபிகள் பொருட்டாலும்
அதன்பின் நபிகள் பொருட்டாலும்
நீதிநம் பிராட்டிகள் பொருட்டாலும்
நான்குயர் சஹாபாக்கள் பொருட்டாலும்
வேத மொழிப்படி நடந்தொழுகும்
வலிமார் குத்புகள் பொருட்டாலும்
சீத நோய்கள் பலாய்கெல்லாம்
தீர்ப்பாய் எங்கள் றஹ்மானே!

(6)

உலகின் முஃமின்கள் பொருட்டாலும்
உண்மை முஸ்லிம்கள் பொருட்டாலும்
நலமுறுந் தவத்தோர் பொருட்டாலும்
நல்லடி யார்கள் பொருட்டாலும்
பலமுறும் கொடையோர் பொருட்டாலும்
பசித்தோர்க் களித்தோர் பொருட்டாலும்
தலமீ துறும்பெரும் பலாய்களெலாந்
தடைசெய் தருள்வாய் றஹ்மானே!





(7)

கண்ணை யிமைபோற் காப்பவன்நீ
கல்லினுள் தேரையைக் காத்தவன்நீ
எண்ணறு நாம முள்ளவன்நீ
ஏகமு நிறைஸம தானவன்நீ
பெண்ஆண் எனவகை படைத்தவன்நீ
பெரும்பெரும் ஆலங்கள் வகுத்தவன்நீ
மண்ணினில் வந்த வபாநோயை
மறைந்தொழிந் திடச்செய் றஹ்மானே

(8)

நேர்வழி புறுக்கான் தந்தவன்நீ
நின்னடி யார்களைக் காப்பவன்நீ
பேர்பெருஞ் செல்வந் தருபவன்நீ
பிரியமா யெங்களைக் காப்பவன்நீ
கூர்மை யறிவுகள் தருபவன்நீ
குறைவற வுஜீவனந் தருபவன்நீ
ஊரினில் வந்தப லாய்களெலாம்
ஓட்டி யழித்திடு றஹ்மானே !

(9)

அற்பமாங் கெர்ப்பக் குவளறையில்
அன்புட னெங்களைக் காத்தவன்நீ
உற்பத் தீரைந்து மாதங்களில்
உறுப்புட னுலகில் விட்டவன்நீ
நற்சுக மாய்த்தவழ்ந் தெழுந்திருந்து
நடக்கவு மிருக்கவும் வைத்தவன்நீ
துர்க்குண முளநோ யெங்களிடந்
தொடரா தருள்செய் றஹ்மானே!

(10)

ஆறு யிரத்தி யறுநூற்றி
யறுபத் தாறு ஆயத்தினில்
கூறு நூற்றிப் பதினுன்கில்
சொல்லும் ஏவல் விலக்கல்களைக்
கூறி முடித்திற சூல்மூலம்
குபிர்கள் விலகச் செய்தவன்நீ
தேறும் இவ்வே தப்பொருட்டால்
தீர்ப்பாய் குறைகள் றஹ்மானே!





(11)

வாதம் பித்தம் சிலேத்மங்களில்
வகைவகை யாய்வரும் பெருநோய்கள்
பேத முறும்பெரும் பைத்தியங்கள்
பிசகுறுங் காசங் கன்னைசை
தீதுறும் வாத மென்பதுவுந்
தீராப் பக்க வாதங்களும்
ஏதும் வாரா தெங்களுக்கு
இரங்கிக் காப்பாய் றஹ்மானே!

(12)

ஜுரங்கள் ஜன்னிகள் சூதகநோய்த்
துன்பஞ் செய்யும் பெரும்பாடு
முரண்கள் செய்யும் மூலநோய்
முகங்கால் வீங்கும் பாண்டுநோய்
சிரநோ யான பித்தநோய்
சிரமஞ் செய்யும் நீரிழிவு
பிறவு நோய்க ளணுகாமற்
பேணிக் காத்தருள் றஹ்மானே!

(13)

கொம்பன் படுவன் அக்ரமெனுங்
கொடிய வாந்தி பேதிநோய்
வெம்பும் வெள்ளை வெட்டைநோய்
வெறுப்புறும் அம்மை வைசூரி
அம்புவிக் காகா பிளேக்நோயும்
ஆறுக் குஷ்டப் பதினெண்ணோய்
துன்பஞ் செய்யும் பலநோயுந்
தொடரா தருள்செய் றஹ்மானே!

(14)

கண்ட நோயுங் கண்ணோயுங்
கர்ப்பா சயத்தில் வருநோயும்
அண்ட நோயும் அபநோயும்
அஷ்ட குன்மங் கொடுவாய்வும்
தண்ட நோயும் தடைநோயுந்
தடிக்கா லானைக் கால்நோயும்
சண்டி நோயும் வாராமல்
தயவாய்க் காத்தருள் றஹ்மானே!





(15)

கண்ணோய் தொண்ணூற் றாறுவகை
கடின மான மண்டைநோய்
பெண்ணுண் மலடு பேர்வருத்தம்
பிடுங்கிப் பிழியும் வயிற்றுவலி
உண்ணு திருக்கு மோங்காரம்
உருட்டுப் புரட்டு சதிவிக்கல்
ஹன்னு சால்வரும் நோய்களெலாங்
காணு தருள்செய் றஹ்மானே!

(16)

பில்லி சூனியம் மனப்பேதம்
பிரிந்திடச் செய்யும் முகமாற்று
கொல்ல நினைத்துச் செய்சூது
குரளி யேவல் மாரணங்கள்
வெல்லுங் கன்மஞ் சாபங்கள்
விதியி னுல்வருந் துன்பங்கள்
பொல்லா வறுமை நோய்களையும்
நில்லா தருள்செய் றஹ்மானே!

(17)

துற்குண முளஜின் ஷைத்தான்கள்
தேவதை மற்றும் பிசாசினங்கள்
பற்பல வான குபாடங்கள்
பகைஞரி னால்வரும் இடையூறு
அற்பர் களின்சக வாசங்கள்
அறநெறி தவறுந் துவேஷங்கள்
தப்பித முளபெருந் தங்கடமுந்
தளர்த்தி யருள்வாய் றஹ்மானே!

(18)

ஆங்கா ரமுடன் வருநோயும்
அவுஷ தமில்லா மாநோயும்
ஏங்கித் திணறும் மரணநோய்
ஈழை யிளைப்பு நீரடைப்பு
நான்கா யிரத்தி நானூற்றி
நாற்பத் தெட்டு நோய்களையும்
நாங்கள் காணா தோடிடச்செய்
நல்வழி காட்டும் றஹ்மானே!





(19)

திருடர் தனிவழி யாபத்துந்
தீயி னால்வருந் தங்கடங்கள்
மிருகங் களினால் ஆபத்தும்
மிடிமையி னால்வரும் முஸீபத்தும்
அரவங் கடிவிஷம் மறுவிஷங்கள்
ரணங்கள் கட்டிகள் பிளவைகளும்
திருஷ்டிகள் யாவும் அணுகாமல்
தயவாய்க் காத்தருள் ரஹ்மானே

(20)

பயிர்கள் தாவர வர்க்கங்கள்
பலந்தரும் மரங்கொடி பச்சைகள்
உயிர்கள் யாவுஞ் சேமமதாய்
ஓங்கி வளர்ந்திட வுன்னருளால்
தைரி யந்திட தேகமுற
நின்றுனை நாங்கள் வணங்கிடவே
கைராய் மழையைப் பொழிந்தருள்வாய்க்
கருணைக் கடலே றஹ்மானே!

(21)

நெல்நவ தானிய நிலைகொண்டு
நிகரில் லாமல் விளையுண்டு
பல்நக ரெல்லாஞ் செழிப்புண்டு
பசியெனுஞ் சொல்லெல் லாமாண்டு
அல்வழி யென்னுந் துயரகன்று
அனுதின முன்னைத் துதிகொண்டு
நல்நிலை பெறவரம் ஈந்தருள்வாய்
நலமார் எங்கள் றஹ்மானே

(22)

நெஞ்சம தால்வரும் பாவங்கள்
நேர்வழி தவறிய பாவங்கள்
வஞ்சனை யாயுறும் பாவங்கள்
வாய்கரங் கால்செய் பாவங்கள்
சஞ்சல முறும்பெரும் பாவங்கள்
ஷறஹினை யிழந்த பாவங்கள்
மிஞ்சிடுஞ் சிறிய பாவங்கள்
முழுதும் போக்கிடு றஹமானே!





(23)

குருமொழி கொள்ளாப் பாவங்கள்
குறைபல செய்த பாவங்கள்
அருள்வழி செல்லாப் பாவங்கள்
அன்னையர் நொந்த பாவங்கள்
திருமொழி தள்ளிய பாவங்கள்
தந்தையர் நொந்த பாவங்கள்
கருவினில் அமைந்த பாவங்கள்
எல்லாம் போக்கிடு றஹ்மானே!

(24)

வறுமை பஞ்சம் ஊழ்வினையும்
வகையறு நாசத் தப்பிதங்கள்
சிறுமை சின்னஞ் செய்பிழையுஞ்
சிலபல ரகசிய பாவங்கள்
மறுமை நினையாப் பாவங்கள்
மடைமை மாசுறும் எண்ணங்கள்
நிறைந்த பாவம் அடங்கலையும்
நிவர்த்தி யருள்வாய்றஹ்மானே!

அல்லாஹ் முனாஜாத்

(25)

''பல்லாக் குத்தம்பி'' யெனும்மிஸ்கீன்
பகர்ந்த அல்லாஹ் முனாஜாத்தால்
பொல்லாத் துன்பந் துயரகலப்
பேணும் நல்வழி யும்சேர
எல்லா முஸ்லிம் ஆண்பெண்கள்
இதய மகிழ்ந்து ஓதிவர
அல்லாஹ் வல்ல பெரியவனே
அருள்வாய் ஆமீன் றஹ்மானே!

(முற்றும்)

---

அச்சிட்டோர் :

**மில்லத் பிரிண்டர்ஸ்**
16. அப்பு மேஸ்திரி தெரு
சென்னை-600 001

பதிப்பு : பிப்ரவரி 1994.